கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 31.08.2020

# 31.08.2020ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

**01)** இந்நகராட்சி பராமரிப்பில் இயங்கிவரும் அம்மா உணவகத்தில் கொரானா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததால் 05.04.2020 முதல் 22.05.2020 வரை உள்ள காலத்தில் சென்னை சில்க்ஸ், ஹரிதா மஹால் மற்றும் அம்மா உணவகத்தில் இருந்து தயார் செய்து டிபன் மற்றும் மதிய உணவு பொருட்களை அலுவலகம், ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் சாலையோர மக்களுக்கு உணவு வழங்க பயன்படுத்த ஆட்டோ வாடகை நாளொன்றுக்கு ரூ.900/– வீதம் 48 நாட்களுக்கு உரிய செலவினத்தொகை ரூ.43200/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதி கீழ் நடைமுறைப்படுத்தலாம்.
3. அவசர அவசியம் கருதி கொரானா பாதிப்பு ஏற்பட்ட காலத்திற்கு தேவை பயன்பாட்டிற்கு ஆட்டோ பயன்படுத்தியமைக்கு உரியதொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5346 / 2020 / அ6**

---

**02)** இந்நகராட்சி பராமரிப்பில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு இட்சி, சாம்பார் மற்றும் தயிர்சாதம் டோக்கன் ஆகியவற்றை நாடார் பிரஸ் மூலமாக பணியினை மேற்கொண்டதற்கு 31.03.2020 வரை வரப்பெற்ற பில் பட்டியல்களுக்கும் 01.04.2020 முதல் 31.03.2021 (2020–2021) வரை உள்ள காலத்திற்கும் உத்தேச செலவினமாக ரூ.1,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதி கீழ் மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி அம்மா உணவகத்திற்க தேவையான இட்லி, சாம்பார் மற்றும் தயிர்சாதம் டோக்கன் அச்சடித்து பெற்றமைக்கு உரிய தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4065 / 2018 / அ6**

---

**03)** இந்நகராட்சி பராமரிப்பில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு கொரானா பாதிப்பு காலத்தில் துப்புரவு பணியாளர்கள் 400 பணியாளர்களுக்கு மதிய உணவுடன் ஒரு முட்டை வழங்கிய செலவினத்தொகை ரூ.25,695/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி கொரான பாதிப்பு காலத்திற்கு பொதுமக்களுக்கு சுகாதாரமான உணவு வழங்கும்போது ஒரு முட்டை வழங்கியமைக்கு உரியதொகை ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4511 / 2020 / அ6**

---

**04)** கும்பகோணம் நகராட்சியில் தற்பொழுது 2019-20 ம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெறுவதை முன்னிட்டு 1 முதல் 45 வார்டுகளின் சொத்துவரி, காலிமனைவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம், வரியில்லா இனங்களின் கேட்பு வசூல் நிலுவை பதிவுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, பைண்டிங் செய்து தணிக்கைக்கு காண்பித்திடவும், இப்பணியினை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திடம் பிரிண்ட் எடுப்பதற்கும், பைண்டிங் செய்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும், இச்செலவினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**ந.க.எண். 6605 / 2020 / அ1**

---

**05)** இந்நகராட்சியின் 1 முதல் 45 வார்டுகளுக்குரிய 2019–20ம் ஆண்டு அனைத்து வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு வசூல் நிலுவை விபரங்களை பிரிண்ட் எடுத்ததை வார்டு வாரியாக பைண்டிங் செய்திட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், 27.7.2020ம் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | ஆர்.ராஜேந்திரன்,<br>ஜெய ஸ்ரீ பைண்டிங் இன்டஸ்ட்ரிஸ்,<br>1360, சத்திரம் கருப்பூர், கும்பகோணம் | ஒரு புத்தகத்திற்கு = ரூ 60/– |
| 2 | மகேஸ்வரி புக் பைண்டிங் ஒர்க்ஸ்,<br>15,கர்ண கொல்லை வடக்குத்தெரு,<br>கும்பகோணம் | ஒரு புத்தகத்திற்கு = ரூ 72/– |
| 3 | ஆர்.சுரேஷ்,<br>உதயம் பிரிண்டர்ஸ் பைண்டர்ஸ்,<br>15, கல்லூரி சாலை, கும்பகோணம் | ஒரு புத்தகத்திற்கு = ரூ 95/– |

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஆர்.ராஜேந்திரன்,ஜெய ஸ்ரீ பைண்டிங் இன்டஸ்ட்ரிஸ், கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.6605/20/அ1

---

**06)** இந்நகராட்சியின் 1 முதல் 45 வார்டுகளுக்குரிய 2019–20ம் ஆண்டு அனைத்து வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு வசூல் நிலுவை விபரங்களை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்ததை பிரிண்ட் எடுத்து அளித்திட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், 27.7.2020ம் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்பீடு சிஸ்டம்ஸ் & ஜெராக்ஸ்,<br>9/3,சாரங்கபாணி சன்னதி தெரு,<br>கும்பகோணம் | A4 Size Printout =1.40<br>Legal Size Printout=2.00 |
| 2 | ஜே பிரிண்ட் சிஸ்டம்ஸ்,<br>18ஏ,பிரம்மன் கோவில் கடைத்தெரு,<br>கும்பகோணம் | A4 Size Printout =1.60<br>Legal Size Printout=2.50 |
| 3 | சாய் ஸ்ரீ டிரேடர்ஸ்,<br>18/3,பிரம்மன் கோவில் கடைத்தெரு,<br>கும்பகோணம் | A4 Size Printout =1.70<br>Legal Size Printout=3.00 |

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்பீடு சிஸ்டம்ஸ் & ஜெராக்ஸ், கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.6605/20/அ1

---

**07)** கும்பகோணம் நகராட்சி பகுதி வார்டு எண்.1, பிளாக் எண்.4, நகரளவு எண்.82/3, 83/4–ல் 2.24 ஏக்கர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவின் சாலை அமைப்பு வரைப்படத்திற்கு கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமத்தின் கடித ந.க.எண்.1031/2019 குஉதிகு நாள்.10.09.2019–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் மின் கம்பங்கள் மற்றும் மின் விளக்குகள் அமைக்க மின்வாரியத்திடமிருந்து கேட்பு பெறப்பட்டு ரூ.387720/– தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 03.08.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மின் விளக்குகள் அமைக்க ரூ.24296/– நகராட்சி கருவூலத்தில் 06.08.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக பொறியாளர் சான்று அளித்துள்ளார். எனவே கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட சாலை அமைப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் மேற்படி சாலைகள் தானமாகப் பெறவும், மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. உத்தேச மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தினை அனுமதிக்கலாம்.
2. மன்றத்தின் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு சாலைகளை தானமாக பெற்று கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 9029 / 2019 / டி1**

---

**08)** இந்நகராட்சி வார்டு எண்.5, குப்புசாமி நகர் விரிவாக்கத்திற்கு புதிய தெருவிளக்குகள் அமைத்து தருவதற்கு மேற்கண்ட பகுதிக்கு மின்வழித்தடம் அமைத்து தருமாறு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டு, மின்வழித்தடம் அமைக்க கேட்பு தொகை ரூ.47828/– வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.
3. இச்செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின்கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 26696 / 2020 / இ3**

---

**09)** இந்நகராட்சி45 வார்டுகளில் தினசரி குடிநீர் விநியோக பணிகளில் குடிநீர் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் மற்றும் குடிநீர் குழாய்களை சரி செய்யும் பணிக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.900000/க்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 3.00% அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01%குறைவாககொடுத்துள்ளThiru.N.Saravanan,Contractor, Kumbakonam.நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 5248/2020/ /E3**

---

**10)** கும்பகோணம் நகராட்சி பராமரிப்பு கீழ் இயங்கி வரும் குடிதாங்கியில் உள்ள இரு தலைமை நீரேற்று நிலையங்கள் , வலையப்பேட்டை நீருந்து நிலையம் மற்றும் 13 எண்ணிக்கை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றை இயக்கும் பணிக்கான விளம்பரத் கட்டணத்தொகை ரூ.19001/– யினை Accord Advertising Agencies க்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு** 1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று தொகை வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) இச்செலவினத்தை குடிநீர்மற்றும் வடிகால் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்

**ந.க.எண். 11702/ 2018 /இ3**

---

**11)** இந்நகராட்சி பொறியியில் பராமரிக்கப்படும் கீழ்கண்ட ஒன்பது வாகனங்களுக்கு 2020–21 ம் ஆண்டிற்கான வாகன வரி, FC எடுத்தல் மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்த உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வாகன எண் | வாகன வரி |
|---|---|---|
| 1 | TN 49 AX 2923 | பொலிரோ |
| 2 | TN 49 AX 2929 | பொலிரோ |
| 3 | TN 49 AX 2908 | பொலிரோ |
| 4 | TN 49 5754 | ஹைட்ராலிக் லேடர் |
| 5 | TN 68 Q 1116 | ஸ்கார்பியோ |
| 6 | TN 49 U2266 | ஹைட்ராலிக் லேடர் |
| 7 | TN 49 4385 | குடிநீர் குழாய் இணைப்பில் பழுது கண்டறியும் வாகனம் |
| 8 | TN 49 A1294 | காம்போ லாரி |
| 9 | TN 49 A8490 | டிசில்டிங் மெசீன் |

**அலுவலக குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகனங்களுக்கு காப்பீட்டு தொகை செலுத்தியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**ந.க.எண். 689/2009 /E3**

---

**12)** கும்பகோணம் நகராட்சி பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தின் Water Sample Analysis Inlet மற்றும் Outlet (Date of sample Collection 18/02/2020) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் எடுக்கப்பட்டது. இதன் ஆய்வு அறிக்கை செலவு தொகை ரூ.2320/– குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 8741 / 1997 / இ4**

---

**13)** Maintenance and repair works of 180HP motors and cable work,MCCB panel work and 15 HP Motor services in old well and Collector New well at Kudithangi in Kumbakonam Municipality – க்கான பணியினை குடிநீர் மற்றும் வடிகால்நிதியிலிருந்து மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு,

<u>அலுவலக குறிப்பு</u>
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்

<u>ந.க.எண். 6482/2020 /E2</u>

---

**14)** Maintenance and repair works to 125 HP motor and 60 hp motor and panel works to valayapetai booster station in Kumbakonam Municipality – க்கான பணியினை குடிநீர் மற்றும் வடிகால்நிதியிலிருந்து மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு,

<u>அலுவலக குறிப்பு</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்

<u>ந.க.எண். 6481/2020 /E2</u>

---

**15)** தமிழக அரசின் மானிய கோரிக்கை அறிவிப்பில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகள் மேம்பாடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனுமார் குளத்தினை முற்றிலும் துந்வாரி நான்கு புறமும் தடுப்புச் சுவர் எழுப்பி மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல், நீர் வரத்து மற்றும் வெளியேற்றும் அமைப்புகள் ஏற்படுத்தும் பணிக்கு ரூ.165.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 218 /2020 /E2</u>

---

**16)** இந்நகராட்சிக்கு சொந்தமான கரிக்குளம் குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் BIO MINING முறையில் அப்புறப்படுத்தப்பட்டு சுமார் 9 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டது.Tamilnadu Innovation Initiatives - state Innovation fundதிட்டத்தின் கீழ் Solar Power Plant 5.25 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ள 1.2 MWPமின் உற்பத்தி திறன் கொண்ட Solar Power Plant அமைக்கும் பணிக்கு ரூ.757.60 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் உயரழுத்த மின் இணைப்புகளுக்குஒரு வருடத்திற்கு சராசரியாக ரூ.154.00 இலட்சம் மின் கட்டணம் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மீட்டெடுக்கப்பட்ட இடத்தில் 1.2 MWP Solar Power Plant அமைப்பதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை , தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும்போது ஒரு வருடத்திற்கு சராசரியாக ரூ.98.00 இலட்சத்தை, உயரழுத்த மின் இணைப்புகளுக்கு செலுத்தும் மின் கட்டணத் தொகையில் ஈடு செய்யலாம். எனவே 1.2 MWP Soalr Plant ரூ.757.60 இலட்சத்தில் அமைக்க முழு மானியத்துடன் கூடிய நிதி ஒதுக்கீடு வழங்கிட நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு,

<u>அலுவலக குறிப்பு</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 8131/2020 /இ3</u>

---

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**